சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – புதிதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 6 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சத்துணவுத் திட்ட செயலாக்கத்திற்கென புதியதாக பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச ந 4–1) துறை

அரசாணை (நிலை) எண்.55

நாள் 30.08.2024
திருவள்ளுவர் ஆண்டு 2055
ஆவணி 14

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 424, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 12.11.2019.
2. அரசாணை (நிலை) எண். 426, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 12.11.2019.
3. அரசாணை (நிலை) எண். 428, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 12.11.2019.
4. அரசாணை (நிலை) எண். 430, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 12.11.2019.
5. அரசாணை (நிலை) எண். 72, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, நாள் 25.10.2021.
6. சமூக நல ஆணையரின் கடித ந.க.எண். 37062/சஉதி.1.(2)/2019, நாள் 15.09.2023 மற்றும் 08.03.2024.

------

ஆணை:–

மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள, செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 6 மாவட்டங்களில், மாவட்ட சமூக நல அலுவலகங்கள் மற்றும் அவற்றிற்குத் தேவையான புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு தொடர் மற்றும் தொடரா செலவினங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. சமூக நல ஆணையர், மேலே 6–வதாக படிக்கப்பட்ட கடிதங்களில், புதிதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் சத்துணவுத் திட்டப் பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர்களுக்கு தனித்தனியாக கோப்புகள் பராமரிப்பது, கூட்டங்களில் கலந்து கொள்வது போன்ற

பணிகளை தற்போதுள்ள குறைந்தபட்ச பணியாளர்களை கொண்டு நடைமுறைப்படுத்துவது மிகுந்த சிரமமாக உள்ளது என்றும், மேலும், சத்துணவுத் திட்டம் மிகவும் உணர்வு பூர்வமானது (Sensitive) என்பதால், தினந்தோறும் கண்காணிக்க வேண்டியதன் அவசியம் கருதி, புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் ஆட்சியர்களுக்கு நிர்வாகத்தினை இடையூறின்றியும், பணிப்பளு இன்றியும் எளிமைப்படுத்த வேண்டிய தேவை உள்ளதாலும், தனி நிர்வாக கட்டமைப்பு அத்தியாவசியமாக உள்ளது என்றும், தற்போதுள்ள ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சத்துணவு பிரிவிற்கென குறைந்தபட்ச பணியிடங்களே உள்ளதால், இரு மாவட்ட நிருவாகங்களை ஒரு மாவட்ட பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்வது மிகவும் சிரமமாகவே உள்ளது என்றும், எனவே, புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 6 மாவட்டங்களில், சத்துணவுத் திட்ட செயலாக்கத்திற்கென கீழ்கண்ட பணியிடங்களை ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறும், இது தொடர்பாக ஏற்படும் மொத்த செலவினம் ரூ.4,12,08,696/-க்கு (தொடர் செலவினம் - ரூ.3,89,58,696/- மற்றும் தொடரா செலவினம் - ரூ.22,50,000/-) ஒப்பளிப்பு செய்யுமாறும் சமூக நல ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

| வ எண். | பணியிடத்தின்பெயர் | எண்ணிக்கை (இதே எண்ணிக்கை 6 மாவட்டங்களுக்கும்) |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ச.உ.தி) | 1 |
| 2. | உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 3. | உதவியாளர் | 1 |
| 4. | தட்டச்சர் | 1 |
| 5. | அலுவலகஉதவியாளர் | 1 |
| 6. | தகவல் தொகுப்பாளர் | MME மூலம் நிரப்புதல் (ஒப்பந்த அடிப்படை - 100% மத்திய அரசு நிதியுதவி) |
| 7. | கணினி உதவியாளர் | MME மூலம் நிரப்புதல்(ஒப்பந்த அடிப்படை - 100% மத்திய அரசு நிதியுதவி) |

3. புதிய மாவட்டங்களுக்கான அலுவலகங்களை உருவாக்க தேவைப்படும் செலவினங்களின் விவரம் பின்வருமாறு:-

தொடர் செலவினம் :-

| வகை | தொகை (ரூபாயில்) |
|---|---|
| பணியாளர்களின் ஊதியம் | 3,38,46,696 |
| பயணப்படி | 43,20,000 |
| எதிர்பாராத செலவினங்கள் | 7,92,000 |
| மொத்தம் | 3,89,58,696 |

தொடரா செலவினம் :-

| வ. எண் | பொருள் | செலவினம் ரூ. |
|---|---|---|
| 1. | கணினி மற்றும் உபகரணங்கள் (ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 3) ரூ.75,000 (6 மாவட்டத்திற்கும்) கணக்குத் தலைப்பு – 2236-02-102-AR-37602 | 13,50,000 |
| 2. | தளவாடச் சாமான்கள்ரூ.1,50,000(6 மாவட்டத்திற்கும்) கணக்குத் தலைப்பு – 2236-02-102-AR-30505 | 9,00,000 |
| 3. | மொத்த தொடரா செலவினம் | 22,50,000 |

<u>மொத்த செலவினம்:-</u>

(தொடர் + தொடரா செலவினம்)
ரூ. 3,89,58,696 + ரூ.22,50,000 = ரூ.4,12,08,696/-

4. மேலே படிக்கப்பட்ட சமூக நல ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, கீழ்கண்டவாறு ஆணையிடலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:-

i) புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய ஆறு மாவட்டங்களில், சத்துணவுத் திட்ட செயலாக்கத்திற்கென பின்வரும் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்படுகின்றன :-

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை (இதே எண்ணிக்கை 6 மாவட்டங்களுக்கும்) |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ச.உ.தி) (நிலை-22, 56100-205700) | 1 |
| 2. | உதவிக் கணக்கு அலுவலர் (நிலை-20, 37700-138500) | 1 |
| 3. | உதவியாளர் (நிலை-10, 20600-75900) | 1 |
| 4. | அலுவலக உதவியாளர் (ஒப்பந்த அடிப்படையில்) | 1 |
| 5. | தகவல் தொகுப்பாளர் | MME மூலம் நிரப்புதல் (ஒப்பந்த அடிப்படை – 100% மத்திய அரசு நிதியுதவி) |
| 6. | கணினி உதவியாளர் | MME மூலம் நிரப்புதல் (ஒப்பந்த அடிப்படை – 100% மத்திய அரசு நிதியுதவி) |

ii. இந்நேர்வில் அரசுக்கு ஏற்படும் மொத்த செலவினம் ரூ.4,12,08,696/- (ரூபாய் நான்கு கோடியே, பன்னிரெண்டு இலட்சத்து, எட்டாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஆறு மட்டும்) (தொடர் செலவினம்- ரூ.3,89,58,696/-மற்றும் தொடரா செலவினம் - ரூ.22,50,000/-)-க்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

iii. அலுவலக உதவியாளர் பணியிடத்தினை ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட வேண்டும்.

iv. தட்டச்சர் பணியிடம் புதியதாக தோற்றுவிக்கத் தேவையில்லை, கணினி உதவியாளரை தட்டச்சராகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

v. நடைமுறையில் உள்ள விதிகளின்படி கணினி, உதிரி பாகங்கள் மற்றும் தளவாட சாமான்கள் GEM Portal மூலம் வாங்கப்பட வேண்டும்.

vi. வாடகை கட்டிடங்களுக்கு பதிலாக, அரசு கட்டிடங்களில் காலியிடம் இருப்பின், அதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

vii. அரசாணை (நிலை) எண்.398, நிதி (படிகள்) துறை, நாள் 14.12.2018-இன்படி சுற்றுப் பயணச் செலவினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தலாம்.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

| வ.எண். | கணக்குத் தலைப்பு விவரம் | நிதி ஒப்பளிப்பு | 2024-2025 ஆம் நிதி ஆண்டிற்கான நிதி ஒப்பளிப்பு |
|---|---|---|---|
| | 2236- சத்துணவு -02- சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் - 102- மதிய உணவு - மாநிலச் செலவினங்கள்- AR - கிராமப் பகுதிகளில் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்தும் பணியாளர்கள். | | |
| | தொடரும் செலவினம்<br>301 சம்பளங்கள் | | |
| 1. | 01 அடிப்படை சம்பளம் | ரூ.2,02,26,636/- | ரூ.1,14,45,600/- |
| 2. | 02 மருத்துவப்படி | ரூ.94,800/- | ரூ.43,200/- |
| 3. | 06 வீட்டு வாடகைப்படி | ரூ.9,48,000/- | ரூ.4,32,000/- |
| 4. | 303 அகவிலைப்படி<br>01 அகவிலைப்படி | ரூ.1,09,47,900/- | ரூ.57,22,800/- |
| 5. | 304 பயணச் செலவுகள்<br>01 சுற்றுப் பயணப்படிகள் | ரூ.43,20,000/- | ரூ.28,80,000/- |
| | 305 அலுவலகச் செலவுகள் | | |
| 6. | 01 தொலைப்பேசி கட்டணங்கள் | ரூ.1,80,000/- | ரூ.1,20,000/- |
| 7. | 02 ஏனைய சில்லறைச் செலவுகள் | ரூ.72,000/- | ரூ.48000/- |

| | | | |
|---|---|---|---|
| 8. | 03 மின் கட்டணங்கள் | ரூ.2,88,000/- | ரூ.1,92,000/- |
| 9. | 04 தபால் மற்றும் அஞ்சல் செலவினம் | ரூ.72,000/- | ரூ.48,000/- |
| 10. | 333 தொழில் முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல்<br>04 ஒப்பந்த ஊதியம் | ரூ.16,29,360/- | ரூ.10,96,240/- |
| 11. | 376 கணினியும் துணை பாகங்களும் 03 எழுதுப் பொருட்கள் | ரூ.1,80,000/- | ரூ.1,20,000/- |
| | தொடரா செலவினம் | | |
| 12. | 376 கணினியும் துணை பாகங்களும் 02 பராமரிப்பு | ரூ.13,50,000/- | ரூ.13,50,000/- |
| 13. | 305 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன் | ரூ.9,00,000/- | ரூ.9,00,000/- |
| | மொத்தம் | ரூ.4,12,08,696/- | ரூ.2,43,87,840/- |

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத் தொகை ரூ.2,43,87,840/-, 2024-2025ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினம் 2024-2025ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட சமூக நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2024-2025ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு /இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை, தவறாது நிதித் (ச.ந./வ.செ.பொ-1) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பிவைக்குமாறு சமூக நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.4962299/மை.ம.ஆ.பி/2024, நாள் 28.08.2024 மற்றும் பணியிடப்பேரேட்டு எண்.202408PSL0124-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0665 (அறுநூற்று அறுபத்தைந்து). (IFHRMS ASL NO.2024080665)

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளிதரன்,
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை-5.
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், சென்னை-113.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18/35. (பெயரில்)

மாவட்ட கருவூல அலுவலர்கள், (செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் – மகளிர் உரிமை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை–9.
நிதித் (ச.ந.)/(வ.செ.பொது–I/II/வ.வ.–I/மை.ம.ஆ.பி) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

30/08/2024

பிரிவு அலுவலர்.

30/8/2024